**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE** INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8033657

1. District : மாவட்டம் Theni District PS: காவல்நிலையம் VSJAC, Theni Year: ஆண்டு 2018 FIR No.: மு.த.அ. எண் 03/18 Date: நாள் 18.06.18

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988. Sections பிரிவுகள்: 7

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.05.18, 01.06.18, 12.06.18, 14.06.18 and 15.06.18 Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.06.2018 Time : நேரம் 10.30 Hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 15 Km North East.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Municipal Surveyor, Periyakulam Municipality. Theni District.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Govindaraj (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Ramasamy Nayakkar.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1965 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி 41A, Vetrilai Mada Theru, Vaithiyanathapuram, Vadakarai, Periyakulam, Theni District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Selvam, Municipal Surveyor. Periyakulam Municipality. Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — NIL —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

— Computer typed Separate sheet enclosed —

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு ரஜேந்திரன்

Signature of the Officer in-charge, Police Station 18/6/18
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 18-6-18
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
18-06-2018 / 17.00 Hrs.

Name: பெயர் P. SUNDARARAJAN.
Rank: நிலை Inspector of Police, VSYAC, Theni. No. எண் ..........

12. F.I.R. contents (Attach separate sheet if required):
(முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/2018-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான் இன்று 18.06.2018ம் தேதி 10.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், பெரியகுளம், வடகரை, வைத்தியநாதபுரம், எண்.41-A.வெற்றிலைமடத்தெரு, ராமசாமிநாயக்கர் மகன் திரு.கோவிந்தராஜ் அவர்களது புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்தினருடன் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நான் சென்ற 05.02.2018 ஆம் தேதி எனது மனைவி G.மகேஸ்வரி பெயரில் பெரியகுளம் கீழவடகரை, மூங்கிள்காரபடித்துறை, தெருவில் வசிக்கும் திரு.நாகராஜன் அவர்கள் மனைவி திருமதி.காளீஸ்வரி என்பவரிடமிருந்து தற்போது நாங்கள் குடியிருக்கும் 41-A, வெற்றிலைமடத்தெரு, வைத்தியநாதபுரம், வடகரை, பெரியகுளம், தேனி மாவட்டம் என்ற முகவரியில் உள்ள ஆர்.சி.சி போட்ட வீட்டை ரூ.7,50,000/-க்கு விலைக்கு வாங்கினேன். பின்னர் அந்த வீட்டின் பட்டாவை எனது மனைவி G.மகேஸ்வரி பெயருக்கு மாறுதல் செய்யக் கேட்டு 05.03.2018 ஆம் தேதி தேனி கலெக்டர் ஆபீஸிலும், 17.05.2018 ஆம் தேதி பெரியகுளம் தாலுகா ஆபீஸில் நடந்த ஜமாபந்தியிலும் தனித்தனி மனுக்கொடுத்தேன். அதற்கு இரசீதுகள் பெற்றுக்கொண்டேன். பின்னர் சுமார் 10 நாட்கள் கழித்து மனுக்கொடுத்த தாலுகா அலுவலகத்தில் சென்று கேட்டேன். அவர்கள் உங்கள் மனு பெரியகுளம் முனிசிபல் சர்வேயருக்கு அனுப்பப்பட்டுவிட்டது. நீங்கள் அவரைப் போய்பாருங்கள் என்று சொன்னார்கள். அதன்படி நான் 30.05.2018 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு பெரியகுளம் முனிசிபல் சர்வேயர் ஆபிசுக்குப் போய் சர்வேயர் திரு.செல்வம் அவர்களைப் பார்த்து எனது மனைவி பெயரில் கொடுத்த மனுபற்றிக் கேட்டேன். அதற்கு சர்வேயர் திரு.செல்வம் உங்கள் மனு மற்றும் பத்திரத்தைப் பார்த்தேன். பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள அளவைவிட இந்த இடத்திற்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள பட்டாவில் உள்ள அளவு அதிகமாக உள்ளது. நான் பட்டாவில் உள்ளபடி அப்படியே உங்கள் மனைவி பெயரில் பெயர் மாற்றம் செய்துதர ஏற்பாடு செய்ய ரூ.25,000 செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை யோசித்து வருகிறேன் என்று சொல்லி வந்துவிட்டேன். பின்னர் 01.06.2018 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு பெரியகுளம் முனிசிபல் ஆபிசுக்கு போய் சர்வேயர் திரு.செல்வம் அவர்களைப் பார்த்து எங்கள் பத்திரத்தில் உள்ள அளவிற்கு பட்டா போட்டுக் கொடுங்கள் என்று சொன்னேன். அப்படி என்றால் இடத்தின் அளவு குறையும், அதற்கு ரூ.25,000-க்கு பதிலாக ரூ.15,000 செலவாகும் என்று சொல்லி தற்போது வேலை உள்ளது, வரும் செவ்வாய்கிழமை வாருங்கள் என்று சொன்னார். நானும் 05.06.2018 ஆம் தேதி

செவ்வாய்கிழமை சர்வேயர் திரு.செல்வம் அவர்களை அவரது அலுவலகம் சென்று பார்த்தேன். வரும் வெள்ளிக்கிழமை வாருங்கள் என்றார். அதன்படி 08.06.2018 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை சுமார் 11.00 மணிக்கு சர்வேயரை முனிசிபல் ஆபிஸில் பார்த்தபோது அளவு வித்தியாசத்தை சரிசெய்துதர மனுதாரரான என் மனைவியிடம் நகர ஆவணங்களின்படி உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்துதரக் கேட்டு அவர் முன்பாக ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுப்பதுபோல் எழுதிவாங்கி வரச்சொன்னார். நானும் சரியென்று வந்து திங்கள்கிழமை 11.06.2018 ஆம் தேதி சர்வேயர் சொன்னபடி ஸ்டேட்மெண்ட் ஒன்றை எனது மனைவியிடம் வாங்கிச் சென்று சர்வேயரைப் பார்க்க அன்று அவர் அலுவலகத்திற்கு வரவில்லை. பின்னர் 12.06.2018 ஆம் தேதி சுமார் 12.30 மணிக்கு சர்வேயரைப் பார்த்து அந்த ஸ்டேட்மெண்டைக் கொடுத்தேன். அதை அவர் பார்த்துவிட்டு அளந்து உட்பிரிவு செய்து பட்டாமாறுதல் பெற ஏற்பாடு செய்ய நான்கேட்ட பணம் ரூ.15,000 கொண்டுவந்துள்ளீர்களா? என்றார். அதற்கு நான் தற்போது கொண்டுவரவில்லை என்றேன். நீங்கள் பணத்துடன் வந்தால் வரும் வியாழக்கிழமை அளந்துவிடலாம், நீங்கள் பணத்தை ரெடிபண்ணிக்கொண்டு எனது செல் நம்பருக்கு கால்பண்ணுங்கள் என்று அவரது டேபிளின்மீது இருந்த NRM டிரான்ஸ்போர்ட் என்ற விசிட்டிங் கார்டின் பின்பக்கம் அவரது செல் நம்பர் 8056695388 பென்சிலில் எழுதிக் கொடுத்தார். பின்னர் நான் 14.06.2018 ஆம் தேதி வியாழக்கிழமை பெரியகுளம் முனிசிபல் ஆபிசுக்குச் சென்று சர்வேயரைப் பார்த்த போது அவர் நீங்கள் வைத்தியநாதபுரம் நுழையுமிடத்தில் உள்ள மல்லிகை திருமண மஹால் அருகில் வந்து எனக்கு போன் செய்யுங்கள் நான் வந்துவிடுகிறேன், உங்கள் இடத்தை அளந்துவிடலாம் என்று சொன்னார். அதன்படி நானும் அவர் செல்லுக்கு போன் செய்ய அவர் மட்டும் பைக்கில் வந்து எங்களது வீட்டை மாலை சுமார் 5.00 மணிக்கு அளந்து முடித்தார். பின்னர் என்னை அவரது அலுவலகத்திற்கு உடன்வரச்சொல்லி அங்கு வைத்து என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.15,000-ம் ரெடியா? என்று கேட்டார். அதற்கு நான் இப்ப, அவ்வளவு பணம் இல்லை ரூ.2000-ம் தான் உள்ளது என்றேன். அதற்கு அவர் இருப்பதைக் கொடுங்கள் என்று என்னிடம் இருந்த ரூ.2000த்தை கேட்டு வாங்கிக்கொண்டு மீதிப்பணத்தை கொடுத்தால் தான் பட்டா மாறுதல் செய்ய வேலை நடக்கும் இல்லாவிட்டால் நடக்காது என்று சொன்னார். அதற்கு நான் கஷ்டமாக இருக்கிறது சற்று குறைத்துக் கொள்ளுங்கள் என்றேன். அதற்கு அவர் ரூ.3000-த்தை குறைத்து ரூ.10,000-ம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்குள் உட்பிரிவு செய்வதற்கான சலானைக் கட்டி இரசீது கொண்டுவரும்படி சொன்னார். நானும் சரியென்று சலானைக்கட்டி 15.06.2018 ஆம் தேதி மாலை சுமார் 4.00 மணிக்கு இரசீதைக் கொண்டுபோய் சர்வேயர் திரு.செல்வத்திடம் கொடுத்தேன். அதை அவர் வாங்கிக்கொண்டு நான் கேட்டபணம் ரூ.10,000-ம் கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் உடனே பணம் புரட்டமுடியவில்லை, ஏற்பாடு செய்துவருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் வரும் திங்கள் அல்லது செவ்வாய் கிழமைக்குள் எனது செல் நம்பரில் பேசிவிட்டு வந்து கொடுக்கும்படி சொன்னார். நானும் சரியென்று வீட்டிற்கு வந்து

யோசித்துப் பார்த்ததில் எனது மனைவி பெயரில் உள்ள வீட்டிற்கு உட்பிரிவு செய்து பட்டா மாறுதல் செய்ய பெரியகுளம் முனிசிபல் சர்வேயர் திரு.செல்வம் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000-ம் கொடுத்துப்பெற என்மனம் விரும்பவில்லை. அதனால் என்னிடம் லஞ்சமாகப் பணம் ரூ.10,000-ம் கேட்ட சர்வேயர் திரு.செல்வம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது மனைவி பெயரில் பட்டா மாறுதல் கேட்டு கொடுத்த மனுக்களின் இரசீது நகல்கள், சர்வேயர் திரு.செல்வம் அவர்களிடம் கொடுத்த ஸ்டேட்மெண்டின் நகல், சர்வேயரின் செல்நம்பர் எழுதப்பட்ட விசிட்டிங் கார்டு மற்றும் உட்பிரிவு செய்வதற்கான சலானின் நகல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். அத்துடன் சர்வேயர் திரு.செல்வம் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000-மும் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxxxx (R.கோவிந்தராஜ், 18.06.2018)

Sir,

Received the above computer typed complaint on 18.06.2018 at 10.30 hrs and registered a Preliminary Enquiry in PE.180/2018/SUR/TN at 1200 hrs on 18.06.2018 Sd/-xxxxxxx (P.Sundararajan, Inspector of Police, Vigilance and Anti Corruption, Theni)

During verification the allegation mentioned in the complaint is found to be genuine. Demand of illegal gratification was confirmed through the sources. Hence I registered a case in Theni Vigilance and Anti Corruption, Cr.No.03/2018 u/s. 7 of Prevention of Corruption Act -1988 at 1500 hrs, today on 18.06.2018 and took up for investigation. Sd/-xxxxxxx (P.Sundararajan, Inspector of Police, Vigilance and Anti Corruption, Theni)

Original FIR along with Original Computer typed complaint of Tr.R.Govindaraj S/o. Ramasamy Nayakkar, D.No.41-A.Vettrilaimadatheru, Vaithiyanathapuram, Vadakarai, Periyakulam, Theni District and with the relevant records is submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Theni and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai

18/6/18

(P.Sundararajan)
Inspector of Police,
Vigilance and Anti Corruption,
Theni District.